KANCHI THALAIVAN

# காஞ்சி தலைவன்

R.N.I.No.TNTAM/2021/88593

நடுநிலை காலை நாளிதழ்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| • மலர் : 5 | இதழ் : 175 | • 03.10.2025 | • தமிழ் நாளிதழ் | • வெள்ளி | • பக்கம் - 4 | • விலை ரூ.5/– | சென்னை |
| • Vol : 5 | Issue : 175 | • 03.10.2025 | • Tamil Daily | • Friday | • Page - 4 | • Price Rs.5/– | Chennai |

### "தமிழகத்தை தலைகுனிய விடமாட்டேன் என்று முதல்வர் ஸ்டாலின் சொன்னார்

# "இன்று தமிழகம் தலைகுனிந்து நிற்கிறது"

### கரூர் சம்பவத்தில் ஸ்டாலின் மீது எடப்பாடி பழனிசாமி சாடல்

♦ **தருமபுரி:**

தருமபுரியில் நேற்று மேற்கொண்ட பிரச்சாரத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசியது: "கரூரில் செப்டம்பர் 27ம் நடந்த சம்பவத்தை நீங்களும் பார்த்திருப்பீர்கள். இந்த ஆட்சியாளர்கள் உரிய முறையில் பாதுகாப்பு கொடுத்திருந்தால் அந்த உயிர்களை பாதுகாத்திருக்கலாம். முறையான, சரியான பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் பெண்கள், குழந்தைகள் உட்பட 41 பேர் இறந்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் யார்? இது மக்கள் கேட்கும் குரல்.

ஆளுங்கட்சிக்கு ஒரு நீதி, எதிர்க் கட்சிகளுக்கு ஒரு நீதியா? நாட்டு மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. போராட்டம், ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம், பேரணி இதுக்கெல்லாம் பாதுகாப்புக் கொடுப்பது அரசின் கடமை. முதல்வரின் கையில்தான் காவல் துறை இருக்கிறது. சரியான முறையில் முதல்வர் உத்தரவிட்டிருந்தால், காவல் துறை சரியான முறையில் செயல்பட்டிருந்தால் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருந்தால், 41 உயிரை இழந்திருக்க வேண்டியதில்லை.

இன்னும் ஆழமாகப் பேசமுடியும். ஆனால் இந்த அரசாங்கம் ஒரு நபர் கமிஷன் அமைத்துள்ளனர், விசாரணை தொடங்கிவிட்டது. அதனால் மேலோட்டமாகத்தான் பேச முடியும். இவ்வளவு பிரச்சினை நடந்துவிட்டது. தமிழகத்தை தலை குனிய விடமாட்டேன் என்று முதல்வர் ஸ்டாலின் சொன்னார். ஆனால் இன்று தலைகுனிந்து நிற்கும் காட்சியைப் பார்க்கிறோம்.



நாடே அதிர்ந்துவிட்டது.

இதுவரை எத்தனையோ அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டம் நடத்தியிருக்கிறது. எந்த ஒரு பொதுக் கூட்டத்திலும் இல்லாத அளவுக்கு 41 உயிர்கள் பறி போயிருக்கிறது என்று சொன்னால், அரசாங்கம் தான் பொறுப்பேற்க வேண்டும். ஆட்சி உங்கள் கையில் இருக்கிறது, ஆட்சி யாளர்களைத்தான் கேட்க முடியும்.

நான் 163 தொகுதியில் மக்களை சந்தித்தேன், 5 முதல் 6 மாவட்டத்தில் தான் காவல் துறை பாதுகாப்பு கொடுத்தனர், மற்ற இடங்களில் நம்முடைய அதிமுக தொண்டர்கள், கூட்டணிக் கட்சித் தொண்டர்கள் தான் பாதுகாப்பு கொடுத்தனர்.

ஆளுங்கட்சி முதல்வர் கூட்டம் நடத்தினால், ஆளே இல்லாத பகுதியில்கூட காவலர்களை நிறுத்தி பாதுகாப்பு கொடுக்கிறீர்கள். அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆளே இல்லாத இடத்தில் பாதுகாப்புக் கொடுக்கும் முதலமைச்சர், ஆயிரக்கணக்கான பேர் இருக்கும் இடத்தில் ஏன் பாதுகாப்பு கொடுக்கவில்லை என்று மக்கள் கேட்கும் கேள்விக்கு முதல்வர் பதில் சொல்லியாக வேண்டும். இதற்கெல்லாம் பதில் சொல்வதற்கு மக்கள் 2026 தேர்தலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள், உங்களுக்குத் தகுந்த பதிலடி வழங்குவார்கள்.

ஒருநபர் கமிஷன் அமைத்துவிட்டு அரசு செயலாளர்களை வைத்து அரசியல் செய்ய வேண்டாம். உங்கள் துறையின் பணிகளை மட்டும் நீங்கள் செய்ய வேண்டும். இதெல்லாம் அதிமுக ஆட்சிக்கு வந்த பிறகு தோண்டியெடுத்து தவறான செயலில் ஈடுபடுகின்ற அதிகாரிகளை விடமாட்டேன்.

மிகப் பெரிய துயர சம்பவத்தை நியாயப்படுத்தி பேசுவது எந்த விதத்தில் சரி? அரசியல்வாதிகள் தப்பித்துக்கொள்ள என்ன வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், அரசு அதிகாரிகள் நடுநிலையோடு செயல்பட வேண்டும், இதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த ஆட்சியிலும், அதிகாரிகளிடமும் அது கிடைக்காது.

கரூரில் இருக்கும் முன்னாள் அமைச்சர் ஏன் பதறுகிறார்? மடியில் கனமில்லை என்றால் வழியில் பயம் இருக்கக் கூடாது, ஆனால் முகத்தில் பயம் தெரிகிறது. அவர் பேச்சில் பயம் தெரிகிறது, மாறி மாறி அதிகாரிகள், முன்னாள் அமைச்சர் எல்லாம் உண்மையை மறைத்துப் பேசுகிறார்கள். இதற்கெல்லாம் தேர்தலில் மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்.

துயர சம்பவம் நடந்துவிட்டது. முதல்வர் இரவோடு இரவாக வந்து ஆறுதல் சொன்னார். ரைட்டு. துணை முதல்வர் உல்லாசமாக வெளிநாடு போய்விட்டார். ஏன் இங்கே நாடு பத்தி எரிஞ்சிக்கிட்டு இருக்கு, நாட்டு மக்கள் பதறிக் கொண்டு இருக்கிறார்கள். உடனே தனி விமானம் பிடித்து வருகிறார், பார்த்தார், மீண்டும் விமானம் ஏறி போய் விட்டார். இவரெல்லாம் ஆண்டால் நாடு உருப்படியாக இருக்குமா?

ஒரு துணை முதல்வர் இவ்வளவு பெரிய பிரச்சினை ஏற்படும்போது எங்கே இருக்க வேண்டும்? தமிழ்நாட்டில் இருந்து தேவையான உதவிகளை செய்துகொடுக்க வேண்டும். கூட்ட நெரிசலில் சிக்கியவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதையெல்லாம் திட்டமிட்டு செயல்படுத்தி இருந்தால் ஒரு நல்ல துணை முதல்வர் என்று சொல்லலாம். ஆனால் அதையெல்லாம் கருணாநிதி குடும்பத்தில் எதிர்பார்க்க முடியாது.

அவர்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஜால்ரா அடிக்கின்றன. திருமாவளவன் உண்மையில் மனசாட்சியோடு பேசுகிறாரா? 41 உயிர் போன நேரத்தில் ஏதேதோ குற்றச்சாட்டுகள் சொல்லி ஆட்சியாளர்களுக்கு தூபம் போடுவதை விட்டுவிடுங்கள்.

இதே திருமா திருச்சியில் மாநில மாநாடு நடத்தினார். அவரை எப்படியெல்லாம் அலைக்கழித்தார்கள் என்பதை அவரே கூறினார். இடது கம்யூனிஸ்ட் விழுப்புரத்தில் மாநாடு நடத்தினார்கள், முழுமையான அனுமதி கொடுக்கவில்லை என்பதை எல்லாம் மறந்துவிடாதீர்கள் உங்கள் கட்சிக்கும் இதே நிலை ஒருகாலத்தில் வந்தே தீரும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்" என்று எடப்பாடி பழனிசாமி பேசினார்.

## பெரியகுளம் மக்கள் நீதி மய்யம் கட்சி சார்பாக காந்தி ஜெயந்தி விழா







♦ **பெரியகுளம்**

நேற்று மகாத்மா காந்தி அவர்களின் 157 வது பிறந்த தினத்தை முன்னிட்டு பெரியகுளம் மக்கள் நீதி மய்யம் கட்சியின், சார்பாக மாவட்ட செயலாளர் MG.ஐயப்பன் தலைமையில் பெரிய குளத்தில் உள்ள அவரது திரு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது

இந்நிகழ்வில் முன்னாள் IT.மாவட்ட அமைப்பாளர் K.ஆதிலிங்க பாண்டியன் பெரியகுளம் நகரச் செயலாளர் P.சரவணன் பெரியகுளம் R.மணிகண்டன் ராமகிருஷ்ணன் தேனி நகரச் செயலாளர் K.பஞ்சவர்ணம். தேனி கிளைச் செயலாளர் M.சிங்கராஜ் தேனிவார்டு செயலாளர் R.ராஜு K.கந்தசாமி EX.ஆர்மி S.லட்சுமி பழனியம்மா வட புதுப்பட்டி கிளைச் செயலாளர் V.ராஜேந்திரன் சேடபட்டி கிளைச்செயலாளர் C.காளிதாஸ் கைலாச பட்டி M.முருகன் வடுகபட்டி M.ஆறுமுகம் A.முருகன் மற்றும் மய்ய உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டனர்

## திருவண்ணாமலையில் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகள்

### அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைத்தார்



♦ **திருவண்ணாமலை :**

*தமிழக முதல்வர் கோப்பைக்கான 2025ஆம் ஆண்டுக்கான மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் நேற்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட அலுவலக வளாகத்தில் உள்ள உள் விளையாட்டு அரங்கில் சிறப்பாக தொடங்கின.*

*இப்போட்டிகளை பொதுப் பணிகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு துவக்கி வைத்து, போட்டியில் பங்கேற் கும் வீராங்கனைகளுக்கு வாழ்த்துகள் தெரிவித்தார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் உடனிருந்தார்.*

*மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை பள்ளி மாணவிகளுக்கான கைப்பந்து போட்டிகள் இன்று தொடங்கி 05.10.2025 வரை நடைபெறும். தொடர்ந்து, கல்லூரி மாணவிகளுக்கான கைப்பந்து போட்டிகள் 08.10.2025 முதல் 11.10.2025 வரை திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.*

*தமிழகத்தின் 38 மாவட்டங்களைச் சேர்ந்த மொத்தம் 646 மாணவியர்கள் இப்போட்டிகளில் பங்கேற்கின்றனர். வெற்றி பெறும் அணிகளுக்கு முதலிடம் ரூ.12 இலட்சம், இரண்டாம் இடம் ரூ.8 இலட்சம் மற்றும் மூன்றாம் இடம் ரூ.4 இலட்சம் என மொத்தம் ரூ.24 இலட்சம் பரிசுத் தொகை வழங்கப்படவுள்ளது.*

*இந்நிகழ்ச்சியில் மாநில தடகள சங்க துணைத்தலைவர் எ.வ.வே.கம்பன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா.இராம்பிரதீபன், விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் சண்முகப்பிரியா, திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*

### வாலாஜாபாத் அருகே

## நத்தாநல்லூரில் ஆண்டிற்கு ஒரு லட்சம் பனை விதைகள் நடவு துவக்கம்!!



♦ **காஞ்சிபுரம்**

*காஞ்சிபுரம் மாவட்டத்தில் விதைகள் தன்னார்வ அமைப்பு சார்பில் ஆண்டுக்கு ஒரு லட்சம் பனை விதைகள் நடவு செய்யும் திட்டம் மேற்கொள்ளப்படுகிறது. அதன்படி கடந்த நான்கு ஆண்டுகளில் 4 லட்சம் பனை விதைகள் நடவு செய்யப்பட்டுள்ளது.*

*இந்நிலையில் 5ம் ஆண்டுக்கான ஒரு லட்சம் பனை விதைகள் நடவு துவக்க விழா வாலாஜாபாத் ஒன்றியம் நத்தாநல்லூர் கீழாண்டை தாங்கல் பகுதியில் நடைபெற்றது. விதைகள் தன்னார்வ அமைப்பு தலைவர் பசுமை சரண் தலைமை தாங்கினர். காஞ்சிபுரம் மாவட்ட அனைத்து வியாபாரிகள் சங்க செயலாளர் அலை டாக்டர் ர. வெங்கடேசன், லயன்ஸ் சங்க மாவட்ட தலைவர் சசிகுமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளராக கைத்தறி மற்றும் துணி நூல்த்துறை அமைச்சர் காந்தி, காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன் ஆகியோர் பங்கேற்று பனை விதைகளை நடவு செய்து துவக்கி வைத்தனர்.*

*இந்நிகழ்ச்சியில் உத்திரமேரூர் எம்.எல்.ஏ.,சுந்தர், காஞ்சிபுரம் எம்.பி., செல்வம், காஞ்சிபுரம் மாவட்ட வனத்துறை அலுவலர் ரவி மீனா, பன்னாட்டு அலையன்ஸ் சங்க மாவட்ட ஆளுநர் கோகுலகிருஷ்ணன், வாலாஜாபாத் ஒன்றியக்குழு தலைவர் தேவேந்திரன், துணை தலைவர் சேகர், ஒன்றிய குழு உறுப்பினர் சஞ்சய் காந்தி, ஊராட்சி மன்ற தலைவர் மணி, விதைகள் தன்னார்வலர்கள், தனியார் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.*

## திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் இனிய உதயம் தொண்டு நிறுவனத்தில் ஆயுத பூஜை கொண்டாட்டம்




♦ **ஆவடி,**

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி பகுதியில் உள்ள இனிய உதயம் தொண்டு நிறுவனத்தில் 1.10.2025 அன்று மதியம் 3 மணி முதல் 4 மணி வரை ஆயுத பூஜை நடைபெற்றது.

இந்த ஆயுத பூஜை நிகழ்வு இனிய உதயம் தொண்டு நிறுவனத்தின் நிறுவனரும் குழந்தை நல ஆர்வலரும் வழக்கறிஞருமான டாக்டர் கோமளா சிவகுமார் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இனிய உதயம் தொண்டு நிறுவனத்தின் அறங்காவலர் சேகர் அவர்களும், சுஜாதா சேகர் அவர்களும், டாக்டர் இந்திரா பிரியதர்ஷினி அவர்களும், முகேஷ் குமார் அவர்களும், கலந்து கொண்டு விழாவை (பூஜையை) சிறப்பித்தனர். இந்த நிகழ்வில் குழந்தைகளுக்கு பேக்,நோட்பூக் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இனிய உதயம் தொண்டு நிறுவனத்தின் இயக்குனர் ஹரிஷ் குமார், திட்ட ஆலோசகர் லூயீ சகாயம், செயல்பாட்டாளர் சுவலட்சுமி, ஆசிரியர்கள் லலிதா, மோகனா, சஞ்சனா, பிரவீன், குழந்தைகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

காஞ்சித் தலைவன் நாளிதழில்
விளம்பரம் செய்வீர்! பயன் பெறுவீர்!!
தொடர்புக்கு: 98848 34828



காந்தி ஜெயந்தி (அக்டோபர் 2 ) முன்னிட்டு மடப்பட்டு சாலையில் அமைந்துள்ள காந்தி சிலைக்கு பசுமை குழு இளைஞர்கள் காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்த நிகழ்வில் பசுமை குழுவின் முக்கிய இளைஞர்கள் கலந்து கொண்டனர்..

## உத்தமபாளையம் பேரூராட்சியில் அ.தி.மு.க. சார்பில் பயிற்சி முகாம்





♦ **தேனி**

உத்தமபாளையம் பேரூராட்சியில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பில் பூத் (பாகம்) கிளைக் கழக நிர்வாகிகள் செயலாற்ற வேண்டிய பணிகள் குறித்து பயிற்சி முகாம் நடைபெற்றது. தேனி மேற்கு மாவட்ட அ.இ.அ.தி.மு.க செயலாளர் ஜக்கையன் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். இந்த பயிற்சி முகாமில் ஒன்றிய செயலாளர் கல்யாண்குமார் வரவேற்புரையாற்றினார்.

அதிமுக தகவல் தொழில்நுட்ப பிரிவு சின்ன ராஜா உட்பட மதுரை புறநகர் மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு நிர்வாகிகள் கலந்து கொண்டு பயிற்சி வழங்கினார்கள்.கோம்பை கணேசன் (அம்மா பேரவை)உட்பட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.பேரூர் செயலாளர் சக்கரவர்த்தி நன்றி கூறினார்.உத்தமபாளையம் ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள்,உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



♦ **காஞ்சிபுரம்**

குன்றத்தூர் ஒன்றியம் மலையம்பாக்கம் ஊராட்சி தெற்கு மலையம்பாக்கம் அரசு ஒன்றிய தொடக்கப்பள்ளியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் திருமுடி வாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் ஏ.மணி மத்திய ஒன்றிய செயலாளர் தலைமையில் நடைபெற்றது. பொதுமக்கள் பலர் கலந்து கொண்டு வீட்டு மனை பட்டா, மின் இணைப்பு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, உட்பட பல்வேறு மனுக்களை அதிகாரிகளிடம் வழங்கினர்.

உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு வட்டாட்சியர் சேந்திரையன், வட்டார வளர்ச்சி அலுவலர் வரதராஜன், மத்திய ஒன்றிய செயலாளர் திருமுடிவாக்கம் ஊராட்சி மன்ற தலைவருமான ஏ.மணி மற்றும் தலைவர் நந்தினி தமிழ்ச்செல்வன், துணைத் தலைவர் பூங்கொடி பொன்னம்பலம் ஆகியோர் சான்றிதழ்களை வழங்கினர்கள். ஊராட்சி மன்ற தலைவர் நந்தினி தமிழ்ச்செல்வன், துணை தலைவர் பூங்கொடி பொன்னம்பலம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மகேஷ், இளைஞர் அணி துணைச் செயலாளர் பிரகாஷ் உட்பட அதிகாரிகள் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



♦ **விழுப்புரம்**

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில், காந்தியடிகளின் 157வது பிறந்தநாளை முன்னிட்டு, அண்ணல் காந்தியடி களின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, தீபாவளி முதல் விற்பனையை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான் துவக்கி வைத்தார். உடன் உதவி இயக்குநர் (கதர் கிராமத் தொழில் வாரியம்) அன்பழகன் உட்பட பலர் உள்ளனர்.



அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 157வது பிறந்த தினத்தினை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி, இ.ஆ.ப., அவர்கள் உத்தமர் காந்தியடிகளின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

## விஜயதசமியில் அரிசியில் அ எழுதி கல்வியை தொடங்கிய குழந்தைகள்



♦ **தென்காசி**

விஜயதசமியில் குழந்தைகளின் கல்வியை துவங்கினால் கல்வி கடவுள் சரஸ்வதியின் அருள் கிடைக்கும் என்பது நம்பிக்கை. அந்த வகையில் தென்காசி, மேலகரம் பகுதியில் அமைந்துள்ள லிட்டில் ஹாட்ஸ் இன்டர் நேஷனல் பிளே ஸ்கூலில் மாணவ மாணவிகள் சேர்க்கை நடைபெற்றது.

இதில் பள்ளிக்கு பெற்றோருடன் வந்த குழந்தைகள் தாம்பலத்தில் பரப்பிய அரிசியில் குழந்தைகளின் கைகளை பிடித்து ‘அ’ எழுத்து எழுத வைத்து கல்வியை தொடங்கினர். அந்த வகையில் விஜயதசமியில் மாணவர்கள் சேர்க்கை வெகு சிறப்பாக சிறப்பாக நடைபெற்றது



காங்கிரஸ் கமிட்டி 187 வட்டம் சார்பில் மகாத்மா காந்தி பிறந்த நாள் எளிமையின் சின்னம் லால்பகதூர் சாஸ்த்ரி பிறந்த நாள் கர்ம வீரர் காமராசர் நினைவு நாள் ஆர் கே சிவா, லட்சுமி நாராயணன், கலைசெல்வன், சீமான், சரத், செந்தில் நாதன் மண்டல தலைவர், அப்துல் சலாம் ஆகியோருடன் கமிட்டி அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது.




♦ **மதுரை**

மதுரை தெற்கு ரயில் நிலைய சுதாகாரத் துரையின் தலைமையில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு நடைபெற்ற தூய்மை பணியில் மதுரை கல்லூரி, தியாகராஜர் கல்லூரி, தமிழ்நாடு அரசு பாலிடெக்னிக் கல்லூரி, லதா மாதவன் பொறியியல் கல்லூரிகளை சேர்ந்த 80 என்சிசி மாணவர்கள் தூய்மை பணியில் ஈடுபட்டு ரயில் தண்டவாளங்களை தூய்மைப்படுத்தினர். தூய்மை பற்றிய அவசியம் மற்றும் விழிப்புணர்வை ஊர்வலம் மூலமாக பொதுமக்களுக்கு மாணவர்கள் அறிவுறுத்தினர்.

நிகழ்ச்சிகளுக்கான ஏற்பாட்டை என்சிசி அதிகாரிகள் லெப்டினென்ட் கார்த்திகேயன் மற்றும் லெப்டினென்ட் ஞானப்பிரகாசம் ஏற்பாடு செய்தனர். ஏழுவதுஎன்சிசி பட்டாலியன் ராணுவ அதிகாரிகள் சுபேதார் பால் மற்றும் ஹவில்தார் பசுபதி ஆகியோர் கலந்துகொண்டனர்.



♦ **தேனி**

தேனியில் தேசப்பிதா மகாத்மா காந்தியின் 156 வது ஜெயந்தி விழா தேனி மாவட்ட இந்திய நட்புறவுக் கழகம் மற்றும் வெளிச்சம் அறக் கட்டளையின் சார்பில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அப்போது தேனியின் பிரபல சமூக ஆர்வலர்கள் மூத்த வழக்கறிஞர் எம்.கே.எம். முத்துராமலிங்கம், Dr.வி.ஆர்.ராஜன், பண்பாளர் M.சிதம்பரம் உள்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மகாத்மா காந்தியின் பிறந்தநாள் விழா



♦ **சேலம்**

அஸ்தம்பட்டி அஞ்சலகத்தில் உயிர்மெய்த் தமிழ்ச்சங்கம், உலகத்தமிழர் பண்பாட்டு இயக்கம் சார்பில் மாநிலத் தலைவர் சேலத்து பாரதி சொல்லரசர் தலைமையில் மகாத்மா காந்தியின் பிறந்தநாள் விழா நடந்தது. செவ்வை அரிமா வே. சுரேஷ்பாபு, மூத்த பத்திரிகையாளர் கூடலரசன் ஆகியோர் மகாத்மா காந்தியின் திருஉருவச்சிலைக்கு மாலை அணிவித்தனர்.

மேட்டூர் மணிவண்ணன், களரம்பட்டி தினேஷ்,ஏத்தாப்பூர் கோவி. நடராஜன், எம்.பழனி, பா.காமராசு, வெ.கிருபா, கோபிகண்ணன், இல. ஸ்ரீனிவாசன், பணிநிறைவு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சிவசுப்ரமணியன், வழக்கறிஞர் ஜே. கே. சுதன், அரிமா வே. சுரேஷ்பாபு, கவிஞர் மா. புகழேந்தி, செய்தியாளர் ஏ. ரமேஷ், ஆர்.ராஜேந்திரன், அரிமா சு.சரவணன், பரதநடன ஆசிரியர் தா.சுபத்ராதேவி, கவிஞர் வீரகனூர் ஆ.இரவிச்சந்திரன்,

கருங்கல்பட்டி ஆர்.சுந்தரம், யோகா எம். லலிதா, கோல்டு கே. தேவராஜ், எம். முருகன், மேச்சேரி இரா. கௌசல்யா, எஸ். ராஜேந்திரன், ச.தேவேந்திரன், செவ்வை நகர அஞ்சல் வணிகத்துறை அலுவலர் எஸ்.சரவணன், பன்முக கலைஞர் ரா.சு.யுவராசு உட்பட பலர் திரளாக கலந்துகொண்டனர் மூத்த இதழாளர் கூடலரசன் மகாத்மா காந்தியின் பிறந்தநாளையொட்டியும், தனது பிறந்தநாளையொட்டியும் அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கி மகிழ்ந்தார்.

காஞ்சித் தலைவன் நாளிதழில்
விளம்பரம் செய்வீர்! பயன் பெறுவீர்!!
தொடர்புக்கு: 98848 34828

## திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாள் விழா – தீபாவளி கதர் சிறப்பு விற்பனை துவக்கம்

♦ **திருவண்ணாமலை :**

உத்தமர் மகாத்மா காந்தியடி களின் 157வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் மற்றும் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் நேற்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சிறப்புவிழா நடைபெற்றது.

மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் காந்தியடி களின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, தீபாவளி கதர் சிறப்பு விற்பனையை பொதுமக்களுக்காக புதிய ஆடைகள் வழங்கி துவக்கிவைத்தார்.

மகாத்மா காந்தியடிகள் அற வாழ்க்கை, துணிச்சல், அமைதி மற்றும் நேர்மையின் சின்னமாக உலக மக்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கிறார். அந்நிய துணிகளை புறக்கணித்து, அனைவரும் கதர் ஆடைகளை அணிய வேண்டும் என்பதே காந்தியடிகளின் வாழ்நாள் கொள்கை. அதனை முன்னெடுத்து, அரசு நெசவாளர்கள் நலனுக்காக கதர் கிராமத் தொழில் வாரியம் வாயிலாக பல்வேறு நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் கடந்த ஆண்டில் ரூ.78.00 இலட்சம் மதிப்பில் கதர் விற்பனை செய்யப்பட்டு, இவ்வாண்டு ரூ.108.00 இலட்சம் விற்பனைக்குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மேலும், கதர், பாலியஸ்டர் மற்றும் பட்டு வகை ஆடைகளுக்கு 30% தள்ளுபடி வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட



ஆட்சித்தலைவர் குறிப்பிட்டார். அரசு ஊழியர்களும் பொதுமக்களும் தீபாவளியை சிறப்பாக கொண்டாட கதர் ஆடைகள் வாங்கி ஆதரவு அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா. இராம்பிரதீபன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் க.சரவணன், உதவி இயக்குநர் (கதர் கிராமத் தொழில்கள்) அன்பழகன் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அலங்காநல்லூரில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஓட்டு திருட்டு எதிராக கையெழுத்து இயக்கம்

♦ **மதுரை**

அலங்காநல்லூரில் மகாத்மா காந்தியின் 157 வது பிறந்தநாள் விழா முன்னாள் பாரத பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்தநாள், மற்றும் கர்மவீரர் காமராஜர் அவர்களின் நினைவு தினம் மற்றும் ஜனநாயகம் காப்பதற்காக பாஜக மற்றும் தேர்தல் ஆணையம் இணைந்து வாக்குத் திருட்டில் ஈடுபட்டதாக கூறி மாபெரும் கையெழுத்து இயக்கம் காங்கிரஸ் கட்சியில் சார்பில் வடக்கு மாவட்ட தலைவர் ஆலத்தூர் ரவிச்சந்திரன், தலைமையில் நடந்தது.

முன்னதாக வன்முறை எதிர்ப்பு உறுதிமொழி தீண்டாமை எதிர்ப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. இதில்



வட்டாரத் தலைவர்கள் சுப்பாராயலு, காந்தி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்கள் மாநில பொதுக்குழு உறுப்பினர் நூர்முகமது, அமைப்புசாரா தொழிலாளர் மாநிலத் தலைவர் மகேஸ்வரன், மதுரை புறநகர் மாவட்ட தலைவர் அமைப்புசாரா தொழிலாளர் தலைவர் சோனைமுத்து, மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் மணி வண்ணன், வட்டார தலைவர்கள் சண்முகசுந்தரம், சிவராமன், மகா தேவன், முருகானந்தம் மாவட்ட பொதுச்செயலாளர் ராமமூர்த்தி, அமைப்புசாரா மாநில துணைச் செயலாளர் ஜெயராமன்,

ஒன்றிய துணைத் தலைவர் திரவியம், ஒன்றிய செயலாளர் மலைராஜன், அமைப்புசாரா வட்டார தலைவர் முத்து, மற்றும் நிர்வாகிகள் தர்மராஜா, வட்டாரத் துணைச் செயலாளர் முருகன், கொண்டையம்பட்டி கிராம கமிட்டி தலைவர் முருகன், எஸ் டி எஸ் சி பிரிவு ஒன்றிய தலைவர் பால முருகன், மாவட்ட ஊடகப்பிரிவு தலைவர் கௌதம் பலா, மலைச் சாமி, செயது, ராமச்சந்திரன், பிச்சை கியாஸ் சேகர், பாஸ்கர், சேதுபதி, இனைச் செயலாளர் கண்ணுச்சாமி, வட்டாரப் பிரதிநிதி முத்தன் உள் ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி முடிவில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

# ரூ.32 கோடி மதிப்பில் திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில் மாடவீதியில் சாலை - வடிகால் பணிகள் ஆய்வு : அமைச்சர் எ.வ.வேலு

♦ திருவண்ணாமலை,

திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலைச் சுற்றியுள்ள மாட வீதிகளில் நடைபெற்று வரும் சாலை மற்றும் கழிவுநீர் வடிகால் பணிகளை, பொதுப்பணிகள் நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று நேரில் ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வின் போது, தமிழ்நாடு சட்டப்பேரவை துணைத்தலைவர் கு.பிச்சாண்டி, திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், திருவண்ணாமலை நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மு.பெகிரி ஆகியோர் உடனிருந்தனர்.

பணிகளின் விவரம்

முதல் கட்டம் : ரூ.17 கோடி மதிப்பீட்டில், நவீன இயந்திரம் மூலம் 1 கி.மீ. தொலைவுக்கு கான்கிரீட் சாலை அமைக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

இரண்டாம் கட்டம் : ரூ.15 கோடி மதிப்பீட்டில், 17 கி.மீ. தொலைவிற்கு கான்கிரீட் சாலை அமைக்கும்



பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும் மாநகராட்சி சார்பில் மழைநீர் வடிகால் பணிகளும் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பணிகள் தரமாகவும் துரிதமாகவும் நிறைவு பெற வேண்டும் என அமைச்சர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதற்குமுன், உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 157வது பிறந்தநாளை முன்னிட்டு, திருவண்ணாமலை மாநகராட்சியில் உள்ள காந்தியடிகள் சிலைக்கு அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து சட்டப்பேரவை துணைத்தலைவர், மாவட்ட ஆட்சித்தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர், செங்கம் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் மாநகராட்சி மேயர் நிர்மலா வேல்மாறனும் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்த நிகழ்வுகளில், திருவண்ணாமலை வருவாய் கோட்டாட்சியர் ராஜ்குமார், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் (க-ப) கௌதமன், திருவண்ணாமலை வட்டாட்சியர் மோகன்ராமன், நெடுஞ்சாலைத்துறையினர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# திருவண்ணாமலைக்கு ரூ.1000 கோடி மேம்பாட்டு பணிகள்: திராவிட மாடல் ஆட்சி சாதனைகளை பட்டியலிட்ட அமைச்சர் எ.வ.வேலு

♦ திருவண்ணாமலை:

திராவிட மாடல் நாயகன், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் திருவண்ணாமலை மாநகரம் மற்றும் சட்டமன்றத் தொகுதியில் எண்ணற்ற மேம்பாட்டு பணிகள் நடைபெற்றுள்ளதாக பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு பெருமிதத்துடன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் திருவண்ணாமலையில் செய்தியாளர்கள் சந்திப்பின்போது அவர், மாநகராட்சி மற்றும் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் நிறைவேறிய பணிகள், நடைபெற்று வரும் பணிகள் மற்றும் திட்டமிடப்பட்ட பணிகள் என பட்டியலிட்டார்.

பெரும் நகராட்சி மேம்பாடு:

ரூ.46 கோடியில் புதிய பேருந்து நிலையம், ரூ.29.25 கோடியில் காந்தி நகரில் பூ மார்கெட், காய்கறி அங்காடி, ரூ.85 லட்சத்தில் நவீன மீன் அங்காடி, ரூ.37 கோடியில் டைடல் பார்க்.

ரூ.64.30 கோடியில் கிரிவலப் பாதையில் தங்கும் விடுதி, ரூ.3 கோடியில் 4 இடங்களில் கழிவறைகள்.

நெடுஞ்சாலைத் துறை பணிகள்:

கடந்த 4 ஆண்டுகளில் ரூ.473 கோடியில் 57 பணிகள் நிறைவு, ரூ.92 கோடியில் 6 பணிகள் நிறைவடையும்



நிலையில், 202526ம் ஆண்டில் ரூ.65 கோடியில் 18 புதிய பணிகள் நடைபெற்று வருகிறது.

மாநகர சாலை மேம்பாடு:

ரூ.30 கோடியில் அண்ணாமலையார் திருக்கோயில் மாடவீதியில் சிமெண்ட் சாலை - தீபத்திருவிழாவுக்கு முன் திறப்பு, ரூ.80 கோடியில் சன்னதி தெரு, ஆடுதொட்டி தெரு உள்ளிட்ட பல சாலைகளில் இருபக்க கால்வாய், தார்சாலை, ரூ.11 கோடியில் கிரிவலப்பாதை சாலை மேம்பாடு, ரூ.21 கோடியில் அண்ணா நுழைவுவாயில் - தீபம் நகர் சாலை மேம்பாடு.

ரூ.6.50 கோடியில் பெரியார் சிலை முதல் காந்தி சிலை வரை சாலை அகலப்படுத்தல், மழைநீர் வடிகால்.

பொதுப்பணித் துறை மற்றும் கல்வி- சுகாதார வசதிகள்:

ரூ.19.50 கோடியில் ஒருங்கிணைந்த முதன்மை கல்வி அலுவலர் அலுவலகம், ரூ.3.73 கோடியில் தொழிற்பயிற்சி ஆயத்த பணிமனை, ரூ.2.50 கோடியில் சமுத்திரம் பகுதியில் சமுதாய கூடம்.

ரூ.10 கோடியில் அரசு மருத்துவக் கல்லூரி CEMONC கட்டடம், ரூ.75 லட்சத்தில் அரசு மருத்துவக் கல்லூரி கட்டண வார்டு.

ரூ.2.12 கோடியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு 10 வகுப்பறைகள், ரூ.8.32 கோடியில் கூடுதல் சுற்றுலா மாளிகை.

ரூ.6 கோடியில் சமுதாய கூடங்கள் (வேங்கிக்கால், அத்தியந்தல், சமுத்திரம், மலப்பாம்பாடி), ரூ.12.18 கோடியில் குறைதீர்வு கூட்ட அரங்கம்.

ரூ.2.99 கோடியில் மாவட்ட நகர் மற்றும் ஊரமைப்பு அலுவலகம், ரூ.1.88 கோடியில் இணை சார்பதிவாளர் அலுவலகம், ரூ.2 கோடியில் அரசு மருத்துவ கல்லூரி விடுதி புனரமைப்பு.

“திருவண்ணாமலையின் வளர்ச்சி, திராவிட மாடல் ஆட்சியின் உயிர்ப்பான சான்று. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் இன்னும் பல மேம்பாட்டு பணிகள் தொடரும்,” என்று அமைச்சர் எ.வ.வேலு உறுதிமொழி அளித்தார்.

# விஜயகாந்த் போல் மக்களை பாதுகாக்க தொண்டர் படையை விஜய் அமைக்க வேண்டும் சிவ பக்த சேனா ஆன்மீக பகுத்தறிவு அறக்கட்டளை நிறுவனர் வேண்டுகோள்

♦ தேனி

திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்தவர் சிவக்குமார் இவர் சிவ பக்த சேனா பகுத்தறிவு அறக்கட்டளையை நிறுவி சிவன் கோயில்களை ஒன்றிணைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

இந்நிலையில் இவர் தேனி மாவட்டம் லோயர் கேம்பில் உள்ள முல்லைப் பெரியாறு அணையைக் கட்டிய கண்ணன் ஜான் பென்னிகுக் அவர்களின் திருஉருவ சிலைக்கு வந்து மாலை அணிவித்து விட்டு பத்திரிகையாளர்களை சந்தித்து பேசினார் அப்போது அவர் கூறுகையில் சமீபத்தில் கரூரில் நடைபெற்ற துயர சம்பவம் அனைவரையும் பெரும் பாதிப்பிற்கு உள்ளாக்கி உள்ளது.

இந்த சம்பவத்திற்கு யார் பொறுப்பு என்ற விவாதம் நடைபெற்று வருகிறது இந்த சம்பவத்திற்கு இரண்டு தளபதிகளும் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். விஜய் தரப்பில் இடம் கூறுகளாக கொடுத்தது தான் காரணம் என கூறுகின்றனர் அதை அரசு தரப்பில் அவர் தாமதமாக வந்தது தான் காரணம் என கூறுகின்றனர் விஜய் புதிதாக அரசியலுக்கு வருகிறார் ஒரு படப்பிடிப்பின் போது தாமதமாக இதுவரை சென்றாரா என்று கேள்வி எழுப்பினால் கண்டிப்பாக இருக்க வாய்ப்பில்லை. ஏனென்றால் ஷூட்டிங்கில் தாமதம் என்றால் அதன் இழப்பீடு என்ன என்பது அவர்களுக்கு நிச்சயம் தெரியும்.

காமராஜரை மேற்கோள்காட்டி பேசுகின்றனர் அவ்வாறு பேசுகிறேன் காமராஜர் என்பவர் நேரம் தவறாமல் நடக்கக் கூடியவர் அவ்வாறு இருக்கையில் அதனை



இவர்கள் பாலோ செய்திருக்க வேண்டும் அதேபோன்று அரசு தரப்பை பொறுத்த அளவில் எனக்கு ஓட்டு போட்டவர்கள் மட்டுமல்ல எனக்கு ஓட்டு ஓடாதவர்களுக்கும் நான் தான் முதலமைச்சர் என ஸ்டாலின் கூறுகிறார். அதன் அடிப்படையில் பார்க்கும்போது விஜய் ரசிகர்களுக்கும் விஜயை தேடி வருபவர்களுக்கும் அவர் முதல்வராக இல்லையா என்று கேள்வி எழுகிறது. இவர்களது பாதுகாப்பு பணிகளை முறைப்படி செய்திருந்தால் இந்த விபத்து தடுக்கப்பட்டிருக்கும்.

அதேபோன்று இரு தரப்பிலிருந்து நிவாரணங்கள் அறிவிக்கின்றனர் அரசு தரப்பில் 10 லட்சம் விஜய் தரப்பில் 20 லட்ச ரூபாய் அறிவித்துள்ளார். மாற்று அரசியலை கொடுக்கக் கூடிய சூழ்நிலைக்கு வருவதாக கூறும் விஜய் அரசு அறிவித்த தொகை விட அதிக நிவாரணத் தொகை அறிவிக்கிறார் அதாவது நானும் மற்ற அரசியல்வாதி போல் தான் செயல்படுகிறேன் என்று சொல்கிறாரா அல்லது மாற்று சக்தியாக இருப்பேன் என்று கூறுகிறாரா என்பது தெரியவில்லை.

ஈரோடு சார்ந்த மோகன் என்பவரது கண் பார்வையற்ற தாய் தனது ஒரே மகனை இழந்து தவிக்கிறார் அவரை தத்தெடுத்து எடுத்துக் கொள்ளுமா தத்தெடுத்துக் கொள்வது என்பதும் ஒரு நல்ல அரசியல் தான் எத்தனையோ பேர் வெளிநாட்டில் இருந்து வந்து மக்களை தத்தெடுக்கின்றனர் அதேபோன்று ஆதரவில்லாமல் இருப்பவர்களை தத்தெடுத்துக் கொண்டால் புதிய அரசியலாக இருக்கும். இரு தரப்பினரும் அவர்களது ஈகோ கலை தவிர்க்க வேண்டும் என்று கூறினார்.

இச்சம்பவத்தில் உயிரிழந்த வர்களுக்கு ஆழ்ந்த இரங்கல்களையும் காயம் பட்டவர்கள் பூரண குணமடைய எல்லாம் வல்ல சிவனை வேண்டிக் கொள்வதாக தெரிவித்தார் மேலும் விஜயகாந்த் இது போன்ற அவர்கள் தொண்டர்கள் பொதுமக்கள் என பலரும் கூட்டம் கூடுகையில் அவர்களை கட்டுப்படுத்தும் விதமாக தொண்டர் படையை வைத்திருந்தார் விஜய் ஏன் அவ்வாறு ஒரு தொண்டர் உருவாக்கக் கூடாது என்ற கேள்வி எழுப்பினார். எனவே இனிவரும் காலங்களில் நேரம் தவறாமல் என்பதை விஜய் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்

# மண்டபம் மேற்கு ஒன்றியம் அஇஅதிமுக சார்பில் பூத் கமிட்டி பயிற்சி கூட்டம்!!

♦ ராமநாதபுரம்

மண்டபம் மேற்கு ஒன்றிய அஇஅதிமுக சார்பில் பூத் கமிட்டி பயிற்சி கூட்டம் மண்டபம் மேற்கு ஒன்றிய செயலாளர் ஆர்.ஜி.மருது பாண்டியன் முன்னிலையிலும், மாவட்ட செயலாளர் முனியசாமி தலைமையிலும் நடைபெற்றது. இதில் மண்டல தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைத் தலைவர் வெண்ணிலா சசிகுமார் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு தேர்தலில் அஇஅதிமுக நிர்வாகிகள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினார்.

இதில் விருதுநகர் கிழக்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் பி.யூனுஸ் முகமது,உள்ளிட்ட மாநில எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் ஆர்ஜி . ரத்தினம், மாவட்ட எம்ஜிஆர் மன்ற செயலாளர் ஸ்டாலின், மாவட்ட




அம்மா பேரவை செயலாளர் சேது பாலசிங்கம், விருதுநகர் மேற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி செயலாளர் பாண்டியராஜன்,

மாவட்ட மகளிரணி செயலாளர் ஜெய்லானி சீனிகட்டி, அம்மா பேரவை துணை செயலாளர் நாட்டு கோட்டை கார்த்திக், ஆகியோர் ஆலோசனை வழங்கினார்கள்.

இது BLA2 நிர்வாகிகள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது. அஇஅதிமுக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் BLA 2 நிர்வாகிகள், மகளிர் அணியினர் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர். ஏற்பாட்டினை மண்டபம் மேற்கு ஒன்றிய செயலாளர்ஆர்.ஜி மருது பாண்டியன் சிறப்பாக செய்திருந்தார்.

# மதுரையில் ராம்ராஜ் காட்டன் 6-வது பிரத்யேக ஷோரூம் திறப்பு

♦ மதுரை

மதுரையில் ராம்ராஜ் காட்டனின் 6வது ஷோரூமை மதுரை விளக்குத்தூண் ஏ.வி. துரைக்கண்ணன் நிலக்கிழார் முன்னிலையில், மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் தலைவரும், தாளாளருமான கே. ஹரி தியாகராஜன் திறந்து வைத்தார். திறப்பு விழா நிகழ்ச்சியில் ஏராளமான பேர் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் பாரம்பரியமிக்க ஆடைகள் தயாரிப்பில் முன்னணி பிராண்டாக திகழும் ராம்ராஜ் காட்டன், புதிய ஷோரூம் திறப்பு விழாவில் பேசிய ராம்ராஜ் காட்டன் நிறுவனர் மற்றும் தலைவர் கே.ஆர். நாகராஜன் கூறுகையில்,

தமிழகத்தின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியமிக்க நகரங்களில் ஒன்றாக திகழும் மதுரையில் எங்களின் 6வது ஷோரூமை திறப்பதில் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். வாடிக்கையாளர்கள் தங்களுக்கு விருப்பமான ஆடைகளை தேர்வு செய்யும் வகையில் இங்கு



ஏராளமான ஆடை ரகங்கள் உள்ளன. பாரம்பரியத்தை தினசரி வாழ்வில் கொண்டு வரவேண்டும் என்பதை மனதில் கொண்டு எங்களின் ஒவ்வொரு ஆடைகளும் தயாரிக்கப்படுகின்றன. மேலும் எங்களின் இந்த புதிய ஷோரூம் மூலம் மதுரை நகர மக்களுக்கு பாரம்பரியமிக்க ஆடைகள் முதல் நவீன ஆடை ரகங்கள் வரை விற்பனை செய்ய இருக்கிறோம் என்று தெரிவித்தார்.

இங்கு ராம்ராஜ் காட்டனின் விதவிதமான வேட்டிகள், சட்டைகள், உள்ளாடைகள் மற்றும் ஆண்கள் மற்றும் குழந்தைகளுக்கு என ஏராளமான வகைகள் உள்ளன. மேலும் ராம்ராஜ் காட்டன் தலைவர் கே.ஆர். நாகராஜன், திருமணங்கள், திருவிழாக்கள் மற்றும் கலாச்சார நிகழ்வுகளுக்காக வடிவமைக்கப்பட்ட ஜாக்கார்டு பார்டர்களுடன் கூடிய வேட்டி மற்றும் சட்டை, கிராண்ட் கலெக்‌ஷன்களான சுயம்வர கிராண்ட், பரிணயம் கிராண்ட், சங்கல்பம் கிராண்ட் மற்றும் லக்ஸ் செட் ஆகிய பண்டிகை கால ஆடைகளையும் அறிமுகப்படுத்தினார்.

# பெரியாறு அணையிலிருந்து விநாடிக்கு 100 கன அடி வீதம் தண்ணீர் திறப்பு

♦ தேனி

தமிழக முதல்வர் ஆணையின்படி அரசாணை வாலாயம் எண் 506 நீர்வளத் என்2 கம்பம் பள்ளத் தாக்கிலுள்ள பி.டி.ஆர் மற்றும் தந்தை பெரியார் வாய்க்காலின் கீழ் உள்ள 5146 ஏக்கர் ஒரு போக பாசன நிலங்களுக்கு பெரியாறு அணையிலிருந்து விநாடிக்கு 100 கன அடி வீதம் 120 நாட்களுக்கு அக்டோபர் 1 ஆம் தேதி புதன்கிழமையன்று மாவட்ட வருவாய் அலுவலர் மகாலட்சுமி தண்ணீர் திறந்து வைத்தார்

தண்ணீர் திறக்கப்படுவதால் உத்தமபாளையம் வட்டத்தில் 830 ஏக்கர் நிலங்களுக்கு தேனி மாவட்டத்தில் 4316 ஏக்கர் நிலங்களும் சேர்த்து 5146 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் பி.டி.ஆர். மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால் பாசன விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி நீர் மேலாண்மை மேற்கொண்டு உயர் மகசூல் பெற வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர் தண்ணீர் திறப்பால் உத்தமபாளையம் வட்டாரத்தில் பயன்பெறும்





கிராமங்கள் சின்னமனூர் வேப்பம்பட்டி சீப்பாலக்கோட்டை

தேனி வட்டாரத்தில் பயன்பெறும் கிராமங்கள் சீலையம்பட்டி, பூமலைக்குண்டு, தர்மாபுரி, தாடிச்சேரி, வெங்கடாசலபுரம், கொடுவிலார்பட்டி, ஜங்கால்பட்டி, கோவிந்த நகரம், பாலகிருஷ்ணாபுரம் ஆகிய கிராம விவசாயிகள் பயன்பெறுவர் மேலும் தண்ணீர் திறப்பின் போது உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் செய்யது முகம்மது தாசில்தார் கண்ணன் தமிழக தேசிய விவசாயிகள் சங்கம் தேனி மாவட்ட தலைவர் சீனிராஜ் மரக்கன்றுகள் நட்டனர் உடன் பொதுப் பணித் துறை அதிகாரிகள் மயில்வாகனன் மற்றும் கதிரேஸ்குமார் உடனிருந்தனர்

காஞ்சித் தலைவன் நாளிதழில்
விளம்பரம் செய்வீர்! பயன் பெறுவீர்!!
தொடர்புக்கு: 98848 34828

# எர்ரம்பட்டி கிராமத்திலுள்ள ஸ்ரீ காளியம்மன் கோவில் புரட்டாசி மாத உற்சவ விழா

♦ மதுரை

அலங்காநல்லூர் அருகே உள்ள எர்ரம்பட்டி கிராமமந்தையில் அமைந்துள்ள ஸ்ரீ காளியம்மன், கோவில் புரட்டாசி மாத உற்சவ விழா நடைபெற்றது.இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த திருவிழாவில் முதல் நாள் நிகழ்ச்சியாக நாட்டாமை வீட்டில் இருந்து காப்பு கட்டுதல் அதன் பின்னர் ராஜா ராணி ஆட்டம் நடைபெற்றது அன்று இரவு 1.00 மணியளவில் நாட்டாமை வீட்டில் இருந்து பூ பெட்டி மேளதாளத்துடன் அருகில் உள்ள சாத்தையார் ஓடையில் ஸ்ரீ காளியம்மன் கரகம் ஜோடித்து வானவேடிக்கை முழங்க சன்னதி வந்து அடைதல் அதன் பின்னர் கிராம இளைஞர்கள் சார்பாக



அன்னதானமும் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து முளைப்பாரி எடுத்தல், மாவிளக்கு, தீச்சட்டி, பொங்கல் வைத்தல், கிடாய் வெட்டுதல், உள்ளிட்ட நேர்த்திக்கடன் செலுத்தும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. 02.10.25.காலை 7.00 மணிக்கு மஞ்சள் நீராடல் 9.00 மணிக்கு முளைப்பாரி எடுத்து கம்மாக்கரை சென்றடைதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுடன் திருவிழா நிறைவு பெற்றது. இந்த திருவிழா ஏற்பாடுகளை எர்ரம்பட்டி கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்..

## விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைநல்லூர் தாலுகா கருவேப்பிலை பாளையம் கிராம மக்களுக்கு ஒரு நற்செய்தி:



♦ விழுப்புரம்

திருவெண்ணைநல்லூர் தாலுகா கருவேப்பிலை பாளையம் கிராம மக்களுக்கு அனைவருக்கும் ஒரு நற்செய்தி:

சுற்றுவட்டாரத்தில் எங்கும் இல்லாத தியான மையம் கருவேப்பிலை பாளையம் கிராமத்தில் உதயமாகியது, (heart fulness) என்ற தியான அமைப்பின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு கருவேப்பிலை பாளையம் கிராமத்தில் தியான மையத்தை திறந்து வைத்து அங்கு வருகை புரிந்த அனைவருக்கும் தியானத்தின் தன்மையை எடுத்துரைத்து அவர்கள் அனைவரையும் சிறிது நேரம் தியானத்தில் இருக்கச் செய்து விழாவை சிறப்பாக நடத்தினர்,

மேலும் வரும் காலங்களில் சுற்றுவட்டார பகுதியில் உள்ள கிராம மக்கள் மன அமைதி வேண்டி இங்கு சென்று நீங்கள் தியானம் செய்யலாம் அமைதியான சூழ்நிலையில் நல்ல காற்றோட்டமான வசதியுடன் கூடிய அறை அமைக்கப்பட்டுள்ளது வீடியோ கான்ஃபரன்ஸ் மூலம் தியான அமைப்பு தியான செயல் தியான செய்கைகள் தினமும் கற்றுத் தரப்படுகிறது வேண்டியவர்கள் பயன்படுத்திக் கொள்ளலாம்

## எடையான்குளம் தமிழக அரசின் வணிகவரி மற்றும் அவரப்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகம் புதிய கட்டிடம் அடிக்கல் நாட்டு விழா



♦ விழுப்பும்

இறையானூர் அடுத்த எடையான்குளம் பகுதியில் 2.கோடியே 5 லட்சம் மதிப்பிட்டில் தமிழ்நாடு அரசின் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அவரப்பாக்கம் சார்பதிவாளர் அலுவகம் கட்டடம் கட்டும் பணியின் பூமிபூஜையை முன்னாள் அமைச்சர், செஞ்சி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி கே.எஸ். மஸ்தான் துவங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் செந்தமிழ்செல்வன், திண்டிவனம் நகர செயலாளர்கண்ணன், மாவட்ட ஊராட்சி மன்ற குழு துணை தலைவர் ஷீலா தேவி சேரன், செயற்பொறியாளர் விமலா, உதவி செயற்பொறியாளர்கற்பகம் மற்றும் மரக்காணம் ஒன்றிய குழு தலைவர் தயாளன், துணைத்தலைவர் பழனி, ஊராட்சி மன்றதலைவர் கஜலஷ்மி ரமேஷ் கவுன்சிலர் நாகஜோதி, புருஷோத்தமன் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் பலர் கலந்துகொண்டனர்.

## காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மயிலத்தில் காங்கிரஸார் முப்பெரும் விழா



அக்டோபர் 2 காந்தி ஜெயந்தியை முன்னிட்டு மயிலம் வட்டார காங்கிரஸ் கமிட்டி சார்பில் காந்தி பிறந்த நாள், முன்னாள் பிரதமர் சாஸ்திரி பிறந்தநாள் மற்றும் காமராஜர் நினைவு தினம் ஆகியவற்றை முப்பெரும் விழாவாக கொண்டாடப்பட்டது

மாவட்டத் தலைவர் வழக்கறிஞர் ரமேஷ் தலைமை ஏற்று பேரியக்க மூவர்ண கொடியை ஏற்றி வைத்து ஏழை எளியோருக்கு அன்னதானம் வழங்கினார். மாநில பொதுக்குழு உறுப்பினர் இல.கண்ணன்வரவேற்புரை நிகழ்த்தினார்

வட்டாரத் தலைவர் மெடிக்கல் செல்வம், மாவட்ட செயலாளர்கள் அர்ஜுணன், தாமோதரன், பாபு, வட்டார பொருளாளர் பலராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தொடர்ந்து பதாகை தாங்கி பேரியக்க கொடிகளை ஏந்தி தலைவர்களின் புகழ் முழக்கங்களைஎழுப்பிய வண்ணம் பாதயாத்திரை செல்லப்பட்டது

வட்டார துணைத் தலைவர்கள் சுரேஷ்பாபு, சீத்தாபதி, நிர்வாகிகள் வினாயகம், விஜயகீர்த்தி ராஜ்குமார் முருகன், கருணாநிதி, ஏழுமலை உள்ளிட்ட நிர்வாகிகளும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## அரசு திட்டங்கள் நிறைவேறுவதற்கு BSNL டவர் தடையாக உள்ளது: திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் சச்சிதானந்தம் பேட்டி



♦ திண்டுக்கல்

BSNL 25 வது நிறைவு வெள்ளிவிழா கொண்டாட்டம் நேற்று நடைபெற்றது. BSNL துறையை பாதுகாக்க வேண்டும். BSNL சேவை மக்களுக்கு முழுமையாக இருக்க பார்த்தால் திண்டுக்கல்லில் பிரச்சினை உள்ளது. BSNL டவர் குறைபாடு உள்ளது. இந்த துறை BSNL பாதுகாக்குமா என்ற சந்தேகம் உள்ளது.

தனியாருக்கு 4G சேவை வழங்கிய போதே BSNL 4G வழங்கி இருக்க வேண்டும். அப்படி நடந்து இருந்தால் BSNL வளர்ந்திருக்கும். இன்னமும் BSNL 5G சேவை கிடைக்காத நிலை.


திண்டுக்கல் மாவட்டத்தில் BSNL 424 டவர் உள்ளது. மலைப்பகுதிகளில் போடப் பட்டுள்ள BSNL டவர் சரியாக கிடைப்பதில்லை. பட்டன் செல்போன் வைத்திருக்கும் மக்களுக்கு டவர் முற்றிலுமாக கிடைப்பதில்லை.

மத்திய அமைச்சர் பார்த்து நான் கோரிக்கை வைத்தேன் 4G டவர் போடப்பட்ட இடங்களில் 2 G டவர் மக்களுக்கு கிடைப்பதில்லை. இது சம்பந்தமாக எந்த முன்னேற்றமும் இல்லை.

சிறுமலை மலைப்பகுதிகளில் BSNL சேவை இல்லை. குஜிலியம்பாறை, பாளையம் BSNL சேவை இல்லை. KC. பட்டி மலைப்பகுதி, கொத்தையும் பகுதியிலும் BSNL சேவை இல்லை. அரசு திட்டங்கள் நிறைவேறுவதற்கு BSNL டவர் தடையாக உள்ளது என கூறினார்.

**இருசக்கர வாகனம் ஓட்டும் போது தலைக் கவசம் உயிருக்கு அவசியம்**

## கார் தீப்பிடித்து எரிந்ததில் 3 பேர் உயிரிழப்பு



♦ விழுப்புரம்

விக்கிரவாண்டி காட்டன் மில் அருகே சுற்றுலா சென்ற கார் தீப்பிடித்து எரிந்ததில் 3 பேர் உயிரிழப்பு

சென்னை திருவல்லிக்கேணியைச் சேர்ந்த சம்சுதீன் (25), கொளத்தூர் ரிஷி, ஆவடி மோகன் ஆகியோர் உயிரிழந்தனர். அப்துல் அஜீஸ், தீபக் ஆகியோர் படுகாயங்களுடன் முண்டியம்பாக்கம் அரசு மருத்துவ மனையில் அனுமதி. சென்னையில் இருந்து மூணாறுக்கு சுற்றுலா சென்ற போது விக்கிரவாண்டி அருகே விபத்து..



♦ உளுந்தூர்பேட்டை

உளுந்தூர்பேட்டை காவல் நிலையத்தில் பணிபுரியும் பெண் தலைமை காவலர் 642 திருமதி சோபா அவர்கள் உளுந்தூர்பேட்டை விநாயகா கல்லூரி அருகே இருசக்கர வாகனத்தில் செல்லும் போது எதிரே வந்த கார் மோதி விபத்தில் படுகாயம் அடைந்துள்ளார். அவருக்கு வலது கை மற்றும் கால்களில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது மேலும் முகத்தில் அதிகப்படியான காயமும் ஏற்பட்டுள்ளது. உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்துள்ளார்கள்.

## ஸ்மார்ட் ஜூனியர்ஸ் பிளே ஸ்கூலில் வித்யாரம்பம் நிகழ்ச்சி



♦ செங்குன்றம்,

விஜயதசமி தினத்தன்று பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை முதன் முதலாக பள்ளியில் சேர்ப்பது தொன்று தொட்டு நடைமுறையில் இருந்து வருகின்ற வழக்கமாகும்.

செங்குன்றம் அடுத்த பாடியநல்லூர் எம்.ஏ. நகரில் அமைந்துள்ள ஸ்மார்ட் ஜூனியர்ஸ் ஸ்கூலில் வித்யாரம்பம் நிகழ்ச்சியும் புதிய மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் பள்ளி முதல்வர் தேவகி சரவணன் தலைமையில் நடைபெற்றது. பள்ளியின் நிறுவனர் சரவணன் முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில் புதிதாய் சேர்ந்த மாணவர்கள் நெல்மணிகளில் "அ"கரம் எழுத வைத்து அ, ஆ சொல்ல வைத்தனர். புதிதாய் சேர்ந்த மாணவர்கள் கல்வி உபகரணங்களை பெற்றுக் கொண்டு மனமகிழ்ச்சியுடன் சென்றனர். இதில் மாணவமாணவிகள், பெற்றோர்கள், ஆசிரிய ஆசிரியைகள் கலந்துகொண்டனர்.

## பெருவாயல் டி.ஜே.எஸ் பப்ளிக் பள்ளியில் நவராத்திரி விழா நடைபெற்றது



♦ செங்குன்றம்,

கவரைப்பேட்டை அருகே பெருவாயிலில் அமைந்துள்ள டி.ஜே.எஸ் பப்ளிக் பள்ளியில் நவராத்திரி விழா மிகக் கோலாகலமாகவும் நேர்த்தியாகவும் சிறப்பாக நடைபெற்றது.

கும்மிடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும் டி.ஜே.எஸ் கல்வி குழும தலைவருமான டி.ஜே.எஸ். கோவிந்தராஜன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களை ஊக்குவித்தார்.

டி.ஜே.எஸ். பப்ளிக் பள்ளி இயக்குநரும் தாளாளருமான டி.ஜே.எஸ்.ஜி. தமிழரசன் முன்னிலை வகித்தார். முதல்வர் சூ.கஸ்பார் நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிறப்பாக ஒருங்கிணைத்தார்.

ஒன்பது நாட்கள் கொண்டாடப்படும் நவராத்திரி விழா, தீமைகள் அழிந்து நன்மைகள் வெற்றிபெறுகின்றன என்பதை நினைவூட்டும் வகையில் மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தியது. நமது கலாச்சாரம் மற்றும் பண்பாட்டை மாணவர்கள் அறியும் வண்ணம், சிறப்பு கொலு அலங்காரம் அழகாக அமைக்கப்பட்டது.

இவ்விழாவில் மாணவர்கள் பல்வேறு கலை நிகழ்ச்சிகளில் பங்கேற்று, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். பாடல், நடனம், உரையாற்றல் போன்ற நிகழ்வுகள் விழாவை சிறப்பித்தன.

இந்நிகழ்வை மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் கண்டு களித்ததுடன், இறையருளைப் பெற்றனர்.

## திண்டிவனத்தில் த.மா.கா. சார்பில் காந்தி ஜெயந்தி விழா



♦ திண்டிவனம்:

விழுப்புரம் வடக்கு மாவட்ட தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் திண்டிவனத்தில் காந்தி ஜெயந்தியை முன்னிட்டு அவரது திருவுருவ சிலைக்கு மாவட்ட பொதுச் செயலாளர் சீனிவாசன் தலைமையில் நிர்வாகிகள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

இதில் மாவட்ட துணை தலைவர் கோவிந்தன்,மாவட்ட செயலாளர் வெங்கடேசன், வட்டார தலைவர்கள் தங்கராசு, செங்கேணி, மாவட்ட பொருளாளர் ரவி, நகர தலைவர் ராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்ச்சி ஏற்பட்டினை மாவட்ட தலைவர் சீனிவாசன் செய்திருந்தார். மேலும் இதில் தமிழ் மாநில காங்கிரஸ் நிர்வாகிகள் மோகன், ரங்கநாதன், பாஸ்கர், திருவேங்கடம், பாலாஜி, சதீஷ்,பிரபு, கார்த்திக், வெங்கட்ராவ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். மேலும் இதில் தமிழக வெற்றி கழகத்தின் கரூர் பிரச்சாரத்தில் உயிரிழந்தவர்களுக்கு 2 நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

## காக்கும் கரங்கள் அன்னதான நல சங்கம் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள்



♦ ராணிப்பேட்டை

ஆற்காடு காக்கும் கரங்கள் அன்னதான நல சங்கம் சார்பில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. சங்கத்தின் தலைவர் கு.தணிகேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், 100க்கும் மேற்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி மற்றும் மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகள் வழங்கப்பட்டன. செயலாளர் த.பெருமாள், பொருளாளர் கே.சீனிவாசன் மற்றும் சமூக சேவகர் கே.உதயகுமார் ஆகியோர் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

வணிகரனி மாவட்டத் தலைவர் பொன் கு.சரவணன், நாட்டு மருந்து கடை கே.கணேசன், ஊராட்சி மன்ற தலைவர் எம்.சேட்டு, மணியம் பாஸ்கர், பெல் பிரபு, எம்.ஜிம் சங்கர், தா.கு.கணேசன், ஏ.பொன்னுரங்கம், வி.ராஜேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்ச்சியினை தொடங்கி வைத்தனர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## பாப்பான்குளம் கிராமத்தில் கத்தி போடும் விழா




♦ மடத்துக்குளம்

மடத்துக்குளம் வட்டம் பாப்பான்குளம் கிராமத்தில் பழமைவாய்ந்த அருள்மிகு ராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் திருக்கோவில் அமைந்துள்ளது. இத் திருக்கோவிலில் நவராத்திரி விழா ஆண்டுதோறும் மிகச் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வாண்டும் அம்மனுக்குக் கொலுவைத்து நவராத்திரி விழா சிறப்பாக நடைபெற்றது. நிறைவு நாளான நேற்று வியாழக்கிழமை அம்மன் கோவிலிருந்து மாவிளக்கு மற்றும் முளைப்பாரி ஊர்வலம் வினாயகர் கோவில், முருகன் கோவில், வெள்ளலூர் அம்மன் கோவில், பெருமாள் கோவில் ஆகிய கோவில்களுக்குச் சென்று கோவிலை வந்தடைந்தது. அதனைத் தொடர்ந்து அம்மன் சப்பரம் திருவீதி உலா நடைபெற்றது .

சப்பரத்தின் முன்பாக தேவாங்க இளைஞர்கள் திசுக்கோ வேசுக்கோ என ரத்தம் சொட்டச் சொட்ட கத்தி போட்டனர். இரவு அம்மனுக்கு சிறப்பு அலங்காரப் பூஜைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்பட்டது. விழாவில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர். விழாவுக்கான ஏற்பாடுகளை தேவாங்கர் இளைஞர் நற்பணி மன்றத்தினர் செய்திருந்தனர்.

## வாடிக்கையாளர்களிடம் கரடுமுரடாக நடந்து கொள்ளும் ஆண்டிபட்டி கனரா வங்கி ஊழியர்கள்





♦ ஆண்டிபட்டி

ஆண்டிபட்டி கனராவங்கி ஊழியர்கள் வாடிக்கையாளர்களிடம் கரடுமுரடாக நடந்து கொள்வதால் மன உளைச்சலுக்கு ஆளானவர்கள் வங்கியை மாற்றும் நிலைக்கு தள்ளப்பட்டு வருவதாக சமூக ஆர்வலர்கள் கருத்துக்கூறி வருகின்றனர்.

நகையை அடகுவைக்க வங்கிகளை நாடுபவர்கள் பெரும்பாலும் ஏழை, எளிய, சாமான்யர்களாகவும் படிப்பறிவில்லாதவர்களாகவும் இருப்பார்கள். இவர்கள் நகைகளை அடகு வைக்கவோ மீட்டவோ ஏகப்பட்ட நடைமுறைச் சிக்கலைச் சந்திக்க வேண்டியுள்ளது. இது பற்றிய சந்தேகங்களை சம்மந்தப்பட்டவர்களிடமோ அல்லது வங்கி ஊழியர்களிடமோ அப்பாவி வாடிக்கையாளர்கள் கேட்டால் முகத்தை திருப்பிக் கொண்டு பதில் சொல்லாமல் அலைக்கழிக்கிறார்கள்.

இதனால் வாடிக்கையாளர்களுக்கு மன உளைச்சல் ஏற்படுகிறது. ஆகவே, கனிவுடன் நடந்து கொள்ளும் மற்ற வங்கிகளை நாடும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அதுவும் வீட்டின் அருகிலேயே இன்னொரு வங்கி என்று அமைந்துவிட்டால்? மேலும் வங்கி மேலாளர் வேறு மொழி பேசுகிறவர்கள் என்றால் லோக்கல் ஊழியர்கள் அவர் தலையில் மஞ்சள் அரைக்கவும் தயங்குவதில்லை என்றும் கூறப்படுகிறது.



♦ மதுரை

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு காந்தி மியூசியத்தில் அமைந்துள்ள மகாத்மா காந்தி அவர்கள் திருவுருவ சிலைக்கு மதுரை நகரத்தார் மகளிர் சங்கத்தின் சார்பாக மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

Printed by U.Sathyadevi and Published by U.Sathyadevi KANCHI THALAIVAN Tamil Daily on behalf of U. Sathyadevi and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhadur Street, Ellis Road, Chennai - 600002. and Published at No. E2-861, 50th Cross Street, Thiruvalluvar Nagar, Thiruvanmiyur, Chennai-600041 Editor S.Kumar